**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**MCOP. No. 34 / 2021**

**2025ம் வருடம் ஜூலை மாதம் 7 ம் நாள் திங்கட்கிழமை**

எ.ம.சா.1 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திருமதி. வனஜா என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **பொன்இசக்கிமுத்து** | த/பெ | **முத்தையா** |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் படுக்கபத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். இந்த நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்ததன் பேரில் நான் இன்று அஜராகியுள்ளேன். இந்த விபத்து 13.11.2020 அன்று மதியம் சுமார் 2 மணியளவில் ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்து மானாமதுரை – தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் கல்குறிச்சி விலக்கு அருகே ஏற்பட்டது. நான் விபத்து சமயத்தில் TN 18 3368 Bolero Pickup வாகனத்தை ஓட்டிச்சென்றேன். விபத்து ஏற்பட்ட போது எனக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இருந்தது. விபத்து ஏற்பட்ட போது நான் 60 கி,மீ வேகத்தில் வாகனத்தை ஓட்டிச் சென்றேன். நான் சாலை விதிகளை கடைப்பிடித்து தான் வாகனத்தை ஓட்டிச் சென்றேன். நான் அவ்வாறு வாகனத்தை ஓட்டிச் சென்றபோது விபத்தில் இறந்துபோன நபர் எனது வாகனத்தின் பக்கவாட்டில் வந்து மோதினார். இந்த விபத்து இறந்துபோனவரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது. நான் வாகனத்தை மெதுவாகத்தான் ஓட்டிச் சென்றேன்.

குறுக்கு விசாரணை :–

நான் விபத்து சமயத்தில் எனது வாகனத்தை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து முழுவதுமாக எனது கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்மந்தமாக என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குற்ற வழக்கு மானாமதுரை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. விபத்தில் இறந்துபோன நபர் விபத்து சமயத்தில் சாலை விதிகளை மதித்து கவனமாக இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும் நான் தான் கவனக்குறைவாக சென்று விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் இறந்துவிட்டார் என்ற விபரம் எனக்கு தெரியும். இந்த விபத்திற்கு நான் காரணம் இல்லை என்று காவல் துறையில் மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. இந்த விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் தான் நான் காவல் துறையில் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை